மத்திய அதிவேகப்பாதை செயற்திட்ட பிரிவு I இன் (கடவத்தை – மீரிகம) 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மார்ச் 22 ஆம் திகதிய (2018) 17 மொத்தம் (474) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தை அமுலாக்கல்  முகவராக உள்ளது. கடவத்தை தொடக்கம் மீரிகம வரையிலான மத்திய அதிவேகபாதை செயற்திட்டம் 1 ஆம் பிரிவின் நிர்மாணப் பணிகளை நிறைவேற்றி பூர்த்தி செய்வதல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 186,572 மில்லியனிற்கு (திருத்தப்பட்ட) சமமான 1,371.22 மில்லியன் அமெரிக்க டொலர்களாவதுடன் அதில் 989.448 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான ரூபா 134,628 மில்லியன் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியினால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. எஞ்சிய ரூபா 51,944 மில்லியன் இலங்கை அரசாங்கம் நிதியளிக்க எதிர்பார்க்கிறது. செயற்திட்டப் பணிகள் 2020 செப்தெம்பர் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், 2024 செப்தெம்பர் 14 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 37.67% ஆன பௌதீக செயன்முன்னேற்றம் மட்டும் அடையப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில், வேலை விகிதத்தைக் குறைக்கும் முறையின் கீழ் ஒப்பந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் செயற்திட்டத்தின் தொகுதி 01 இற்கு 2025 ஆகஸ்ட் 10 வரை கால நீடிப்பும், தொகுதி 02 இற்கு 2027 சனவரி 13 வரை கால நீடிப்புப் பெறப்பட்டுள்ளது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பின்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பெறுமதி ரூபா மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வேலைத்தளம் ஒப்பந்தக்காரரிடம் கையளிக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, தொகுதி 1 இற்காக மதியுரை நிறுவனத்தின் ஊடாக 194 நாட்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், பொது ஒப்பந்த நிபந்தனைகளின் உப பிரிவு 2.1 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் இதற்காக ரூபா 65.64 மில்லியன் உரிமைக்கோரலை முன்வைத்திருந்தார். வேலைத்தளம் தாமதமாக கையளிக்கப்பட்டமைக்கான காரணங்கள் மற்றும் தாமதத்தினால் ஏற்படும் மேலதிக கியரம் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளியிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 65.64 | ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக கிரய உரிமைக்கோரல் இன்னும் சான்றுறுதிப்படுத்தப்பட வில்லை. சான்றுறுதிப்படுத்தும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நிதிக் கூற்றுகளில் உள்ளடகப்படும். | தாமதத்திற்கான உரிமைக்கோரல் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 5 இன் 43(அ) பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், நிதிக் கூற்றுக்கள் திகதியில் நிலவும் இறுதி விகிதத்தின் பிரகாரம் மாற்றப்படல் வேண்டும். மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடன்களுடன் தொடர்புடைய வெளிநாட்டு நாணய மாற்று விகித மாற்றங்கள் ரூபா 18,911.72 மில்லியன் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 18,911.72 | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நாணய மாற்று விகித மாற்றங்களுக்கான சீராக்கல்கள் எதிர்வரும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம ஏற்பாடுகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன் முன்னேற்றம்

| கூறு | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல்/ சதவீதம் | அடையப்பட்ட பௌதீக செயலாற்றல்/ சதவீதம் | | |
| தொகுதி 01 கடவத்த தொடக்கம் கொஸ்ஸின்ன | 100 | 39.77 | கடவத்தை தொடக்கம் கொஸ்ஸின்ன வரையான (தொகுதி 01) நிர்மாண பணிகளுக்காக 2016 யூன் 20 ஆம் திகதியும், கொஸ்ஸின்னையிலிருந்து மீரிகமை வரையான (தொகுதி 02) கட்டுமானப் பணிகளுக்காக 2015 ஆகஸ்ட் 04 ஆம் திகதியும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. 2019 மார்ச் 22 ஆம் திகதி கடன் ஒப்பந்தம் கைச்சாத்தப்பட்டிருந்ததுடன் இக் காரணத்தினால் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நான்கு வருடங்களுக்கும் அதிகமான கால தாமதம் ஏற்பட்டது. இந்த இரண்டு தொகுதிகளும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டு இறுதி வரை நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் (பொறியியலாளர்) அவர்களினால் 2025 மார்ச் 07 ஆம் திகதி செயற்திட்டப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட MH&RD/ENG/04/CEP-I.VOL.II ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக தொகுதி 01 இற்காக 2023 மார்ச் 14 ஆம் திகதி தொடக்கம் 2025 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை 880 நாட்களுக்கான கால நீடிப்பும், தொகுதி 02 இற்கு 2024 செப்தெம்பர் 14 ஆம் திகதி தொடக்கம் 2027 சனவரி 13 ஆம் திகதி வரை 851 நாட்களுக்கான கால நீடிப்பும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கால | சீனா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியினால் நிதியளிப்பு தாமதித்திருந்தமை |
| தொகுதி 02 கொஸ்ஸின்ன தொடக்கம் மீரிகம | 100 | 35.57 | | |

நீடிப்புக்கான காரணம் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளின்படி சேவை வழங்குனருக்குள்ள ஏனைய தாக்கங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்படவில்லை.

| | |
|---|---|
| **முகாமைத்துவ கருத்துரை** | கால நீடிப்புக்கான பிரதான காரணம் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியினால் நிதி விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதமாகும். இதன் காரணமாக, ஒப்பந்தக்காரர் வேலை விகிதத்தைக் குறைக்கும் முறையின் கீழ் பணிகளை மேற்கொண்டார். |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | கால நீட்டிப்பினால் சேவை வழங்குநருக்கு ஏற்படும் தாக்கத்தை போதுமான அளவு மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும், மேலதிக செலவுகள் மற்றும் தாமதங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொவிட் 19, வேலைத்தளங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள், பாதகமான காலநிலை தாக்கங்கள், செலுத்த வேண்டிய நிலுவைகளுக்கான வட்டி, எரிபொருள் மற்றும் மின்சார நெருக்கடி மற்றும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கம் போன்ற காரணங்களுக்காக, ஒப்பந்தக்காரரால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 16,149 மில்லியன் மற்றும் சீன யுவான் 6 மில்லியன் பெறுமதியான பதினொரு உரிமைகோரல்கள் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த உரிமைகோரல்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று மதிப்பீட்டு மட்டத்தில் இருந்ததுடன் உரிமைகோரல்கள் காரணமாக செயற்திட்டச் செலவு அதிகரிப்பைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரரால் 28/1,2 ஆம் இலக்க உரிமைகோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், தற்போது 11 மட்டுமே செயற்பாட்டில் காணப்படுகின்றதுடன் மற்றவை நிராகரிக்கப்பட்டன. அந்த காரணத்திற்காக, 11 உரிமைகோரல்களின் விவரங்கள் மட்டுமே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | ஒப்பந்தக்காரருக்கு மேலதிக உரிமைகோரல்களை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் தடுக்கப்படும் வகையில் ஒப்பந்த நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இச் செயற்திட்டத்தின் மிக முக்கியமான பகுதியான கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியுடன் இணையும் வெளிவட்ட அதிவேக வீதியின் ஆரம்பப் பிரிவு (Ch0 + 000 முதல் Ch0 + 500 வரை) 2015 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்படவிருந்ததுடன், அதன் பெறுகை நடவடிக்கைகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மத்திய அதிவேக வீதியின் மீரிகமவிலிருந்து குருநாகல் வரையான பகுதியானது 2022 சனவரி 15 ஆம் திகதியன்று திறக்கப்பட்டிருந்த போதிலும், இன்றுவரை கடவத்தையிலிருந்து மீரிகமை வரையான பகுதியின் | பின்னர் மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ் இதைக் நிர்மாணிக்க முன்மொழியப்பட்டது. தற்போது, இந்தக் கட்டத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகள்/ பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. | முன்னுரிமையை அடையாளம் கண்டு, செயற்திட்டத்தை விரைவாக நிறைவு செய்து, எதிர்பார்க்கப்படும் பொதுமக்கள் நலன்களை பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். |

|  |  |  |  |
|---|---|---|---|
|  | நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்படாத காரணத்தினால், எதிர்பார்த்த பொருளாதார நன்மைகளைப் பெற முடியவில்லை. |  |  |
| (இ) | ஒப்பந்தத்தின் 14.7 மற்றும் 14.8 ஆம் இலக்க பொது ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற இடைக்கால கொடுப்பணவு சான்றிதழ்களுக்காக 56 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தப்படாமையினால், தினசரி அடிப்படையில் நிதிக் கட்டணத்திற்கு ஒப்பந்தக்காரருக்கு உரிமை உண்டு. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, இடைக்கால கட்டண பட்டியல்களின் பெறுமதி ரூபா 40,348 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் இதற்காக, ஒப்பந்ததாரர் 2024 யூன் மாதத்தில் நிதிக் கட்டணங்களாக ரூபா 12,082 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர் 14.77 மில்லியன் உரிமைகோரலாக விண்ணப்பித்திருந்தார். | ஒப்பந்தக்காரருக்கு உரிய கால எல்லைக்குள் கொடுப்பனவுகள் வழங்கப்படாததால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு அமைய வட்டி செலுத்த நேரிடும். | இடைக்கால கொடுப்பனவுகள் தாமதம் குறித்து விசாரணையை மேற்கொண்டு, சீர்திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.3 செயற்றிட்ட நோக்கங்களுக்கு புறம்பான நடவடிக்கைகள்/ கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைய, காணி உரிமை கையகப்படுத்தக்கூடிய வகையில் 38 (அ) இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட 5348 காணித் துண்டுகளில் 725 காணித் துண்டுகள் கம்பஹா மிரிஸ்வத்த மற்றும் கம்பஹா யக்கல வீதிகளை விரிவாக்குவதற்கு தேவையான காணிகளாக இருந்தபோதிலும், இந்த வீதிகளை விரிவாக்குதல் செயற்றிட்டத்தின் விடயப்பரப்பிற்குள் உள்ளடங்கவில்லை எனவும், அதற்கு நிதியளிக்க முடியாது எனவும், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு செயற்றிட்டப் பணிப்பாளரினால் RDA/PD/CEP-1/A-LA/8(E) ஆம் இலக்க 2024 யூன் 13 ஆம் திகதிய கடிதம் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது.<br>அதன் காரணத்தினால் இந்தக் காணி கையகப்படுத்தும் நடவடிக்கைகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காணிப் பிரிவுக்கு நெடுஞ்சாலைகள் அமைச்சின் MOH/DEV/02/CEP-1/03/VOL 3 ஆம் | இந்த வீதிகளை முழுமையாக விரிவாக்கல் மற்றும் மேம்படுத்துதல் CEP-1 செயற்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட விடயப்பர்பிற்கு அப்பாற்பட்டதுடன், போதுமான நிதி இல்லாத காரணத்தினால் அதனை மேற்கொள்ள முடியவில்லை. அதன் பிரகாரம், தேவையான பின்தொடர்தல் மற்றும் அமுலாக்கத்திற்காக 2024 ஆகஸ்ட் 29 திகதிய MOH/DEV/02/CEP-1/03/ Vol.3 ஆம் இலக்க கடிதம் ஊடாக இகவ் விடமானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் (RDA) முறையாக ஒப்படைக்கப்பட்டது. இந்த இரண்டு வீதிகளும் மிக முக்கியமான போக்குவரத்து நடைபாதைகளாவதுடன் நெரிசல் நேரங்களில் தற்போதும் கடுமையான | செயற்திட்டத்தினால் செயற்திட்ட விடயப்பரப்பிற்குள் அடங்காத காணிகளை கையகப்படுத்துவதற்காக 38(அ) உப விதிமுறைகளை வெளியிட்டமை குறித்து விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலக்க 2024 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய கடிதம் ஊடாக கையளிக்கப்பட்டுள்ளன.<br>இந்தக் காணி கையகப்படுத்தல் செயற்திட்டத்தின் விடயப்பரப்பிற்குள் உள்ளடங்காவிட்டாலும், இந்தக் காணிகள் சம்பந்தமாக 38(அ) இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதால் தாமத வட்டி செலுத்துதல் என்பது பொருளாதாரமற்ற செலவாகும். அத்துடன், இந்த 725 காணித் துண்டுகளும் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | போக்குவரத்து நெரிசலை அனுபவிக்கின்றன. கம்பஹா - யக்கல வீதி மற்றும் கம்பஹா - மினுவாங்கொடை வீதி ஆகிய இரண்டையும் நேரடியாக இணைக்கும் கம்பஹா பரிமாற்று நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், போக்குவரத்து நெரிசல் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிவேக வீதி இணைப்பின் நன்மைகளை அதிகபட்சமாக பெறுவதற்கு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்த இரண்டு வீதிகளையும் நான்கு பாதைகளாக விரிவாக்குதல் அத்தியாவசியமானது. | |

## 3.4 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்பத் திட்டத்தின் ஊடாக கம்பஹா இடை பரிமாற்று நிலையத்தை Ch 10+800.00 – 11+400.00 வரம்பிற்குள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மழை காலங்களில் அந்தப் பகுதியைப் பயன்படுத்த முடியாத நிலைமையை செயற்திட்ட ஆலோசகரினால் பின்னர் கண்டறிந்தமையினால் நிர்மாணப் பணிகளை 1.5 கி.மீ. முன்னெடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்டது. ஆரம்ப செயற்திட்டத்தின் பிரகாரம் நிர்மாணப் பணிகளுக்காக 2728.36 பேர்ச்சஸ் காணி கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 2102.86 பேர்ச்சஸ் இலான 95 காணித் துண்டுகளுக்கு நட்டஈடு மற்றும் வட்டியாக 51 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படாத இந்த 95 காணித் துண்டுகளும் வேறு எந்தப் பயனுக்கும் பயன்படுத்தப்படாமல் இருந்ததால் ஏற்பட்ட மேற்குறிப்பிட்ட செலவானது சிக்கனமற்ற செலவாகும். அத்துடன், குறித்த காணிகள் | 2016 ஆகஸ்ட் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி சாத்தியவள அறிக்கை, சாத்தியமான வெள்ளப் பாதிப்புகளைக் குறைப்பதற்குத் தடுப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை அடையாளம் கண்டது. அதிவேக வீதியின் நிர்மாணம் இயற்கையான வடிகால் பாதைகளைத் தடுக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது, இதனால் நீரேந்துப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படக்கூடும். எனவே, பொருத்தமான வடிகால் மற்றும் வெள்ளத் தணிப்பு உத்திகள் செயற்திட்ட வடிவமைப்பின் அத்தியாவசியக் கூறுகளாகப் பரிந்துரைக்கப்பட்டன. | மழைக்காலங்களில் கம்பஹா இடை பரிமாற்றத்தைப் பயன்படுத்த இயலாமை தொடர்பில், செயற்திட்டத்தின் ஆரம்பத் திட்டமிடலில் அது கண்டறியப்படாமை, அதனால் ஏற்படும் தாக்கம் மற்றும் பொறுப்பான தரப்பினர் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

விளைவற்ற சொத்துக்களாகக் காணப்படுகின்றன.

### 3.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| இலக்கம் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் 01 மற்றும் 02 தொகுதிக்களுக்கான ஒப்பந்த உடன்படிக்கைகள் முறையே 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், மூன்று ஆண்டுகளுக்கும் மேலான தாமதத்தின் பின்னர் 2019 மார்ச் 22 ஆம் திகதியன்று சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியுடன் நிதியுதவி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. ஒப்பந்தத்தின் பிரகாரம் 989.44 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவி செய்ய இணக்கப்பாடு காணப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிதியில் 5 சதவீதமான 51.57 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்ததுடன் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாததன் காரணமாக நிரந்தர நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன. 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிலுவையிலுள்ள கடன் தொகைக்காக 7.76 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான ரூபா 2029.53 மில்லியன் தொகையானது கடப்பாடு கட்டணங்களாகச் செலுத்தப்பட்டுள்ளதுடன், கடன் ஒப்பந்தத்தை எட்டுவதில் ஏற்பட்ட தாமதம் செயற்திட்டத்தை மேலும் தாமதப்படுத்தவும், செயற்திட்டச் செலவை அதிகரிக்கவும் பங்களித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டிற்குப் பிறகு கடன் தவணைகள் வழங்கப்படாததன் காரணமாக, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் கடன் பயன்பாடு 51.59 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மட்டுப்படுத்தப்பட்டது. IMF கடன் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்த பின்னர், கடன் தவணைகள் மீண்டும் கிடைக்க ஆரம்பிக்கும். இது தொடர்பான வெளிப்படுத்தல்கள் எதிர்கால நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | இதுபோன்ற சிறப்பு சூழ்நிலைகளால் எழும் பிரச்சினைகள் தொடர்பில் கடன் ஒப்பந்தம் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையை மீளாய்வு செய்து, மாற்று வாய்ப்புகளை பகுப்பாய்வு செய்து, செயற்திட்டத்தின் செலவு அதிகரிப்பதைத் தடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் காணி கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான வட்டி கொடுப்பனவுகளாக ரூபா 863,623,281 காண்பிக்கப்பட்டிருந்தாலும், அட்டவணைகளின்படி அந்த நிலுவைத் தொகை ரூபா 1,070,399,653 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 206,776,372 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | மீதியினை உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ள கால வறையயின் பிரகாரம் சில கொடுக்கல் வாங்கல்கள் றாளதுவரையாக்கப்படவில்லை. | கணக்குகளைச் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரினால் நிதி கூற்றுக்களிலுள்ள புள்ளிவிவரங்கள் மூல ஆவணங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக் கூற்றுக்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக செயற்திட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ள பதவியணியினருக்கு சம்பளக் கொடுப்பனவுகளாக ரூபா 37,657,574 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அட்டவணைகளின்படி அம் மீதி ரூபா 32,189,405 ஆகவிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 5,468,169 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | மேலதிக நேரக் கொடுப்பனவு ரூபா 2,132,040 தொகையானது RDA சம்பளம் மற்றும் பொது அலுவல்களுக்கான பேரேட்டு மீதியில் உள்ளடக்கப்பட்டிராததுடன் அது மேலதிக பயணச் செலவுகள் கள அலுவலகங்கள் மற்றும் மேலதிக நேரம் மற்றும் பயணச் செலவுகள் பிரதான அலுவலகம் ஆகிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது | கணக்குகளைச் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரினால் நிதி கூற்றுக்களிலுள்ள புள்ளிவிவரங்கள் மூல ஆவணங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | நிகழ்காலம் வரையில் நிதி கிடைக்காமையின் காரணமாக, செயற்திட்ட நிர்மாணப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு முறையான பொறிமுறை இல்லாத நிலையில், எதிர்காலத்தில் ஏற்க வேண்டிய செலவுகள், அதாவது விலை வேறுபாடுகள் மற்றும் அந்நியச் செலாவணி விகித மாற்றங்கள் காரணமாக ஏற்க வேண்டிய செலவுகள், இணக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடன் அளவு மற்றும் உள்நாட்டு நிதி பெறுமதி ஆகியவற்றிற்குள் பணிகளை முடிப்பதில் நிச்சயமற்ற தன்மை எழுந்துள்ளதுடன், அந்த நிச்சயமற்ற தன்மைகள் குறையும் வகையில் உரிய சாத்தியவள ஆய்வு இன்றி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதால் இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக செயற்திட்டம் ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், நிர்மாணங்களின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை நீண்டகால அடிப்படையில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. | 2022 யூன் மாதத்திற்குப் பிறகு செயற்திட்டப் பணிகள் தாமதமடைவதற்கு பிரதானமாக சீன EXIM வங்கியினால் நிதியுதவி இடைநிறுத்தப்பட்டமையே காரணமாகும். சாத்தியவள ஆய்வு 2016 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. எனவே, உரிய சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமை காரணமாக வேலைத் தாமதம் ஏற்படவில்லை. | முன்னுரிமையை அடையாளம் கண்டு, செயற்திட்டத்தை விரைவாக முடித்து, எதிர்பார்க்கப்படும் பொது நன்மைகளை வழங்க வேண்டும். |
| (உ) | செயற்திட்ட ஆலோசகரால் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின்படி, வேலைத்தளங்களில் உள்ள 554 கற்றைகள் (Beams) கடுமையான தொழில்நுட்பப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் பொருத்தப்பட்டுள்ள 903 கற்றைகளில் (Beam) உதரவிதானச் சுவர்கள் (Diaphragm walls) இல்லையாமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, நிர்மாணப் பணிகள் | முன்னர் நிறைவு செய்யப்பட்ட தூண்களின் மீது வைப்பதற்காகத் திட்டமிடப்பட்ட 554 கற்றைகள் ஒப்பந்தக்காரரின் வளாகத்தில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 170 கற்றைகள் 2025 மே மாதத்திற்குள் தூண்களின் மீதான கட்டமைப்புகளை நிறைவுசெய்ய பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கட்டம் முடிந்த பிறகு, | நிர்மாணங்களின் தரத்தினை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாக ஒப்பந்தக்காரர் தற்காலிகப் பாதுகாப்பினை மேற்கொண்டிருந்த போதிலும், பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புகளில் வெளிப்படும் கம்பிகள் (Reinforcements) துருப்பிடித்தல் பாரிய பிரச்சினையாக மாறக்கூடும். | ஒப்பந்தக்காரரின் வளாகத்தில் மீதமுள்ள சுமார் 384 முன்-வார்ப்பு கற்றைகளின் வெளிப்படும் எஃகு பாகங்கள் மீது ஒரு சிமெண்ட் அடுக்கு பாதுகாப்பான பூச்சாக ஒப்பந்தக்காரரால் பூசப்படும். | |
| (ஊ) | செயற்திட்டப் பணிகளுக்கான வழிகாட்டி வீதியையும் உள்ளடக்கிய தற்காலிக வீதியை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரரால் 2021 மார்ச் 19 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 955 மில்லியன் பெறுமதியான சலனக் கட்டளையானது 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையில் மதிப்பீட்டு மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 2021 மார்ச் 19 ஆம் திகதியன்று மதியுரை நிறுவனம் ஒரு ஆரம்ப மதிப்பீட்டை மாத்திரமே சமர்ப்பித்திருந்ததுடன், சரியான அளவுகளை இனங்காண்பதிலும் அலகு விகிதங்களை அங்கீகரிப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. | சலனங்கள் குறையும் வகையில், சமர்ப்பிக்கப்படும் கலனங்கள் உரிய நடைமுறைகளின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு, காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலும், ஒப்பந்த நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | வெளிநாட்டுக் கடன் கிடைக்காமையின் காரணத்தினால் ஒப்பந்த உடன்படிக்கை முடிவடைவது தொடர்பான அபாயத்தைக் குறைப்பதற்காக, 2024 மார்ச் 18 மற்றும் 2024 யூலை 01 ஆம் திகதிகளில் நடைபெற்ற தேசிய செயற்பாட்டு அறை கூட்டங்களின் அறிவுறுத்தல்களின்படி, மீளாய்வாண்டில் அரசாங்க நிதியைப் பயன்படுத்தி செயற்திட்டத்தினால் ஒப்பந்தக்காரருக்கு விசேட முற்பணமாக ரூபா 1,200 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. வெளிநாட்டுக் கடன் கிடைப்பது மேலும் தாமதமானால், இந்த வகையில் ஒப்பந்தக்காரருக்கு முற்பணம் செலுத்த நேரிடுவதால் அரசாங்கத்திற்கு மேலதிக நிதிச் சுமை ஏற்படக்கூடும். | 2024 மார்ச் 18 மற்றும் 2024 யூலை 01 ஆம் திகதிகளில் நடைபெற்ற தேசிய செயற்பாட்டு அறை கூட்டங்களில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, 2024 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரருக்கு விசேட முற்பணமாக முறையே ரூபா 500 மில்லியன் மற்றும் ரூபா 700 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளன. செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியில், சேவை வழங்குனர், பொறியியலாளர் மற்றும் ஒப்பந்தக்காரர் ஆகியோர் சுற்றாடலுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். | 2021 ஆம் ஆண்டளவில் ஒப்பந்தக்காரருக்கு உள்நாட்டு வங்கிகள் ஊடாக பெறப்பட்ட வணிக கடன் நிதிகளின் கீழ் முற்பணமாக ரூபா 33 பில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது குறித்து பகுப்பாய்வு செய்யாமலும், நிர்மாணப் பணிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான இணக்கப்பாடு இன்றியும், ஒப்பந்த நிபந்தனைகளுக்குப் புறம்பாகக் கொடுப்பனவுகளை மேற்கொண்டமையால் ஏற்படும் தாக்கம் குறித்து விசாரணையொன்றை மேற்கொண்டு, சீர்திருத்த மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.6 காணி கையகப்படுத்தல் தொடர்பான சிக்கல்கள்

| இலக்கம் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயறதிட்ட நிர்மாணப் பணிகளுக்காக 7,802 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்காக 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் 38(அ) பிரிவின் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்ததுடன், இதில் 5,424 காணித் துண்டுகள் தனியார் துறையினரிடமிருந்து கையகப்படுத்தப்படும் காணிகளாகும். இந்தக் காணி கையகப்படுத்தல்களை விரைவுபடுத்துவதற்காக, நில அளவை மற்றும் விலை மதிப்பீட்டுத் திணைக்களம், காணி அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் காணிப் பிரிவு மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 2016 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் ஊக்குவிப்புப் பணிகளாக ரூபா 33 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், 4312 காணித் துண்டுகளை கையகப்படுத்துவதற்காக நட்டஈட்டுத் தொகையாக ரூபா 11,364 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் 1910 காணித் துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தன. இது தனியார் துறையினரிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கையில் 35 சதவீதமாவதுடன் கையகப்படுத்தப்பட்ட மொத்தக் காணிகளில் 55 சதவீதமானவை (2,422 காணித் துண்டுகள்) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. காணி கையகப்படுத்தல் செயன்முறை தொடர்புடைய நிறுவனங்களுக்கு விசேட நலன்கள் கிடைத்திருந்த போதிலும், காணி கையகப்படுத்தும் செயன்முறை உரியவாறு பூர்த்தி செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அறிக்கையிடப்பட்ட திகதி வரையில், 4,312 காணித் துண்டுகளுக்காக காணி உரிமையாளர்களுக்கு ரூபா 11,364.03 மில்லியன் நட்டஈடு கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. அண்மைய செயன்முன்னேற்ற அறிக்கைகளின்படி, 1,910 பகுதிகளுக்கு 44 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. காணி கையகப்படுத்துதலின் அனைத்து சட்டரீதியான மற்றும் நடைமுறைத் தேவைகளும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுடன் நெருக்கமாக இணைந்து திறனை உறுதிப்படுத்துவதற்காக செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு அர்ப்பணிப்புடன் உள்ளது. | நட்டஈடு செலுத்தி கையகப்படுத்தப்பட்ட காணிகள் உரியவாறு பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | காணி கையகப்படுத்துவதற்காக நட்டஈடு செலுத்துவதில் தாமத வட்டியாக மேலதிகச் செலவை ஏற்க வேண்டியிருந்ததன் காரணமாக | காணி கையகப்படுத்துவதில் ஏற்படும் தாமதத்திற்கான பிரதான காரணங்களாக பின்வரும் விடயங்கள் | நட்டஈட்டுக்கான வட்டி கொடுப்பனவுகள் குறையும் |

| | | |
|---|---|---|
| செயற்திட்டச் செலவு அதிகரித்திருந்தது. 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 4,222 காணித் துண்டுகளுக்காக ரூபா 11,265 மில்லியன் நட்டஈடு செலுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் 1,800 காணித் துண்டுகள் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்தக் காணித் துண்டுகளுக்காக தாமத வட்டியாக ரூபா 864 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் ரூபா 258 மில்லியன் திரட்டப்பட்டிருந்தது. | செல்வாக்குச் செலுத்தியுள்ளன:<br>1. நிறுவனங்களுக்கிடையிலான தங்கியிருத்தல்<br>2. ஆரம்பத் திட்டங்கள் மீள திருத்துதல்<br>3. பிணக்குகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள்<br>4. நட்டஈடு செயன்முறையின் காலப்பகுதி | வகையில், உரிய திட்டமிடலுக்கமைய காணி கையகப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |